மலர் : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 12
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

## அக்டோபர் 2009

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




### TVGM - 2009 அக்டோபர்
### கர்த்தரின் வாக்குத்தத்தம்

**இயேசு கூறுகிறார்:**

**நீங்கள்**
**கேட்டுக் கொள்வதெதுவோ**
**அது உங்களுக்குச்**
**செய்யப்படும்.** யோவான் 15:7



கரூர் மாவட்டம் – **கடவூரில்** Pr. சாமுவேல் கிறிஸ்டியன் அவர்களுடன் இணைந்து கட்டிய ஜெபவீட்டை Yishun Evangelical Church **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** அவர்கள் 17.08.2009 அன்று தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்தார்கள்.

இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

# TAMIL VILLAGE GOSPEL MISSION

## Managing Director

## Letter Dated: 09.09.2009



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,
தேவ சமாதானம் உண்டாவதாக!

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் திட்டமிட்டிருந்தபடியே **கடவூரிலும், M. அழகாபுரியிலும்** இரண்டு ஜெபவீட்டை பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபைசெய்தார். ஜெபித்த, கொடுத்த, உழைத்த ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

தற்சமயம் 9 கிராமங்களில் ஊழியர்கள் விசுவாசத்தில் கட்டிவரும் ஜெபவீட்டிற்கு உதவியாக இருந்து, அக்டோபர் மாதத்தில் முடிவுபெறும் ஜெபவீட்டை பிரதிஷ்டை செய்ய வாஞ்சிக்கிறோம்.

அக்டோபர் 2,3,4 ஆகிய தினங்களில் **"கலிலேயா முகாம்"** கோடாவிளையில் நடைபெறுகிறது. ஜெபத்துடன் பங்குபெற அன்புடன் அழைக்கிறேன். உறவினர்களையும், நண்பர்களையும் வாகனம் ஒழுங்கு செய்து அழைத்து வாருங்கள். உங்கள் பிரயாசத்தின் மூலம் அவர்களும் கிராம தரிசனம் பெறுவார்கள். வளர்த்துக்கொள்வார்கள். உண்டியல், நன்கொடை புத்தகம் வைத்திருப்பவர்கள், முகாமில் கொண்டு வந்து ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கர்த்தருக்காக சேவை செய்ய வேண்டும் என்ற வாஞ்சையுள்ள பிள்ளைகள் இருந்தால் கட்டாயம் கலிலேயா முகாமிற்கு அழைத்து வாருங்கள். வேதம் சொல்லுகிறது ***ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்.***

TVGM ஊழியத்தின் வேலை அதிகமாக இருந்தபடியால் நான் இலங்கை செல்லமுடியவில்லை. என்னுடைய அப்பா மற்றும் பாஸ்டர். பவுல் (வையப்பமலை) இருவரும் செப்டம்பர் 17 முதல் 24 வரை செல்ல திட்டமிட்டிருக்கிறார்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

***கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.***

கிறிஸ்துவின் பணியில்,

ஸ்டீபன் கிறிஸ்டோபர்

**இயேசு கூறுகிறார் :** யோவான் 15:7

# நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, தேவஊழியரே!

இயேசு கூறுகிறார்:**யோவான் 15:7**

**நீங்கள்**

**கேட்டுக் கொள்வதெதுவோ**

**அது உங்களுக்குச் செய்யப்படும்.**

**மத்தேயு 7:7** கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

ஆதலால் இந்த மாதத்தில் விசேஷமாக உங்களுக்கு என்ன தேவையாக இருக்கிறதோ அதை ஒரு தாளில் எழுதி தேவ சமுகத்தில் ஒப்படைத்து கேளுங்கள்.

**மத்தேயு 7:9–11** உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா ?

மீனைக் கேட்டால் அவனுக்கு பாம்பைக் கொடுப்பானா ?

ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா ?

ஆதலால் இந்த மாதத்தில் தேவனிடத்தில் கருத்தாய் **நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

எந்த ஆசீர்வாதம் உங்களுக்குத் தேவையோ, அதை சரியாக தேவனிடத்தில் கேளுங்கள்.

எவ்வளவேனும் சந்தேகத்தோடு கேட்காமல் நிச்சயமாக பரம தகப்பன் பிள்ளைக்கு தருவார் என்ற நிச்சயத்தோடு கேளுங்கள்.

**யோவான் 14:14** என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.

**எத்தனை மேன்மையான ஆசீர்வாதம் !**

**யோவான் 14:13** நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.

என் அன்பு தேவ பிள்ளையே! நீண்ட காலமாக நீங்கள் தேவனிடத்தில், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்ட காரியங்களை இந்த மாதத்தில் **இயேசுவில் பிதா மகிமைப்படும்படியாக, இயேசு கிறிஸ்து உங்களுக்காகச் செய்யப் போகிறார்.** விசுவாசத்தோடே தேவாதி தேவனைத் துதியுங்கள்.

எப்பொழுது எதைக் கேட்டாலும் அதன் மூலம் **தேவன் மகிமைப்பட** வேண்டும் என்ற நோக்கத்துடன் கேளுங்கள்.

அத்துடன் **தேவனுடைய ராஜ்யம் விரிவடைய வேண்டும்** என்ற நோக்கத்தோடு கேளுங்கள்.

**ஏனெனில் கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான். உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

உலகத்தில் இருக்கிற வனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர் ( 1யோவான்4:4 ). ஆமென்!

ஜெபித்து, ஜெபித்து சோர்ந்து போன சகோதரியே, நம்பிக்கை இழந்து போன சகோதரனே, தேவனுடைய வார்த்தை உங்களுக்காகவே கடந்து வருகிறது. இந்த மாதத்தில் **நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

## நீங்கள் செய்ய வேண்டிய 3 காரியங்கள்:

**இயேசு கூறுகிறார்:-**

1. **நீங்கள் என்னிலும்**
2. **என் வார்த்தைகள் உங்களிலும்**
3. **நிலைத்திருந்தால்**

**நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**

**முதலாவது : நீங்கள் இயேசுவில் நிலைத்திருங்கள்**

உங்கள் குல தெய்வம் இயேசுவாக இருக்கட்டும். பேச்சுக்கு பேச்சு, மூச்சுக்கு மூச்சு இயேசுவைக் குறித்தே பேசுங்கள். சிந்தியுங்கள், ஜெபியுங்கள், இயேசுவினிடமே வேண்டுதல் செய்யுங்கள்.

**இரண்டாவது :** இதற்கு ஒப்பான காரியம், **இயேசுவின் வார்த்தையை, வசனத்தை வாசியுங்கள் உங்கள் வாயினால் அறிக்கை செய்யுங்கள்.**

**மத்தேயு4:4** மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல,தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.

உங்கள் வாயின் மூலமாக தேவனுடைய வார்த்தைச் செல்லட்டும் வசனத்தை அறிக்கை செய்யுங்கள்,

தேவனுடைய வார்த்தையாகிய வசனத்தை பிரஸ்தாபப்படுத்துங்கள்.

ஏனெனில் **சங்.138:2** கூறுகிறது: சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உம்முடைய வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.

**மூன்றாவதாக:** தேவனுடைய **வார்த்தைகள் உங்களில் நிலைத்திருக்கட்டும்.** வசனத்தை,உச்சரிப்பது **மேலோட்டமான அனுபவம் ஆகும்**

ஆனால் **வசனத்தில் நிலைத்திருப்பது நிலையான அனுபவம் ஆகும்.** இது மிக முக்கியம்

**சங்கீதம் 119:105** உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

இயேசு கூறுகிறார்:**யோவான் 15:4** கொடியானது திராட்சைச் செடியில் **நிலைத்திராவிட்டால்** அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல நீங்களும் என்னில் **நிலைத்திராவிட்டால்** கனிகொடுக்கமாட்டீர்கள்.

ஆதலால் கர்த்தருக்குள், வசனத்தில் **நிலைத்திருங்கள்.**

என் அன்பு தேவபிள்ளையே! இந்த மாதத்தில் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வார்த்தை **நிலைத்திரு.**

**எந்த காரியமானாலும் நிலைத்திரு,**
**வேலையில் நிலைத்திரு,**
**ஊழியத்தில் நிலைத்திரு,**
**குடும்ப பொறுப்பில் நிலைத்திரு,**
**கர்த்தருக்குள் நிலைத்திரு,**
**கர்த்தருடைய வார்த்தையிலும், வசனத்திலும் நிலைத்திரு.**

அப்பொழுது, **நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.** கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது.

**1யோவான் 5:14** நாம் எதையாகிலும், அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கும் தைரியம்.

ஆதலால் தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து ஜெபியுங்கள். அவர் உங்களுக்கு செவிகொடுத்து, உங்கள் காரியங்களை வாய்க்கப் பண்ணுவார்.

உலக மனிதர்களிடத்தில், உறவினரிடத்தில், ஊழியரிடத்தில், உதவி கேட்டு சோர்ந்து போன நண்பரே!

ஒருவிசை தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்து, அவரிடத்திலேயே விசுவாசம் வைத்து, அவரையே நோக்கி கூப்பிட்டுப் பாருங்களேன்.

**எஸ்தர் 5:6** விருந்திலே திராட்சை ரசம் பரிமாறப்படுகையில், ராஜா எஸ்தரைப் பாத்து, **உன் வேண்டுதல் என்ன? அது உனக்கு கொடுக்கப் படும்; நீ கேட்கிறது என்ன?** நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான்.

ஆம்! பிரியமானவர்களே, உலக மனிதர்கள், உறவினர்கள் , பாதி மட்டும் தான் உனக்கு வாக்களிக்க முடியும். அதாவது அரைகுறையாகத் தான் உனக்கு உதவி செய்ய முடியும்.

ஆனாலும் ராஜாதி ராஜா, யூத ராஜசிங்கம், **நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்** என வாக்களிக்கிறார்.

**பக்தன் பாடுகிறார்:-**

*நீதிமானின் சிரசின் மேல்*
*நித்திய ஆசீர்வாதம் வந்திறங்குமே*
*கிருபை, நன்மைகள் தொடருமே*
*கேட்பது கிடைக்குமே.*
*கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்*
*கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்*
*கைவிடா காத்திடும் பரமனின்*
*கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்.*

பாடுங்கள் பாடிக்கொண்டேயிருங்கள். கிருபைகள், நன்மைகள் தொடரும் **கேட்பதும் கிடைக்கும்** .ஆமென்!

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

இயேசுவின் நாமத்தில் **நான் கேட்டுக் கொள்வதெதுவோ அது எனக்குச் செய்யப்படும்.**

மீண்டும் மீண்டுமாக உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

தேவனுடைய சித்தத்தின்படி கேளுங்கள்.

**நீங்கள் இயேசுவிலும்,**
**இயேசுவின் வார்த்தை**
**உங்களிலும் நிலைத்திருப்பதாக.**
ஆமென்! தேவனுக்கே மகிமை!

## அறிவிப்பு

**2009**ம் ஆண்டில் இதுவரையிலும் தபால் மூலமாகவோ அல்லது காணிக்கை மூலமாகவோ எந்தவித தொடர்பும் இல்லாதவர்களுக்கு அடுத்த மாதம் முதல் **"100கிராம ஊழியம்"** மாதாந்திர பத்திரிக்கை அனுப்புவதை நிறுத்துகிறோம். பத்திரிக்கை தேவையானால் தபால் அல்லது ஈமெயில் மூலம் முழு விலாசத்தை தெரியப்படுத்தி மீண்டும் பெற்றுக்கொள்ளுங்கள்.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## திண்டுக்கல் - வடமதுரை யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**Thanks: Light House Ministries - NECK-ELC**

**நோக்கம்:** **2009 அக்டோபர் 19** திங்கள் காலை 9 மணி முதல் **அக்டோபர் 23** வெள்ளி இரவு 10 மணி முடிய **திண்டுக்கல் – வடமதுரை யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 அக்டோபர் 19** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 அக்டோபர் 23** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 அக். 19 - 23 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**நல்ல சமாரியன் சபை, செல் : 9894988728**
**திண்டுக்கல் பைபாஸ் ரோடு,**
**மின்சார துணை மின்நிலையம் பின்புறம்**
**சத்தியாநகர், வடமதுரை P.o. திண்டுக்கல் Dt.**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர்.மகேந்திரன்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# இராமநாதபுரம் - கமுதி யூனியன்
# 100-கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 17.08.2009 முதல் 21.08.2009 முடிய**

## THANKS: PATMOS (Dr.Tor & Sis.Fera)


58 கிராம ஊழியர்கள்

கர்த்தருடைய கிருபையினால் 17.08.2009 முதல் 21.08.2009 வரை **இராமநாதபுரம் – கமுதி யூனியனில் "100–கிராம ஊழியம்"** ஆசீர்வாதமாக நடைபெற்றது. முதல் நாள், கடைசி நாள் கூடுமிடம், உணவு, சுவிசேஷ புத்தகங்களின் பார்சல் செலவுகள் இவைகளை **கமுதி A.G. சபை பாஸ்டர். எபிநேசர் அய்யாத்துரை** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள். கிராம ஊழியர்களுக்கு கடைசி நாளன்று பாளையம்பட்டி **திருமதி. பர்வீன் & ஜெபமணி அம்மாள்** ஸ்வீட் பாக்கெட் கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள்.


முதல்நாள் ஜெபம்

தமிழ்நாட்டின் 15 மாவட்டங்களைச் சேர்ந்த 58 கிராம ஊழியர்கள் வந்து கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள். முதல்நாள் ஜெபத்தில் கமுதி யூனியனில் உள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திரம் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் T.V.G.M. ஸ்தாபகர் Bro. P.T. கிறிஸ்டோபர் அவர்கள் கலந்து கொண்டு கிராம ஊழியர்களுக்காக, ஊழியங்களுக்காக ஜெபித்து உற்சாகப்படுத்தினார்கள். **பாஸ்டர். எபினேசர் அய்யாத்துரை** தேவ செய்தி கொடுத்தார்கள்.

இதன்பின் கிராம ஊழியர்களை சகோ.பன்னீர்செல்வம் அவர்கள் 11 குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே கூடி தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். கமுதி. A.G. சபையின் சார்பில் கிராம ஊழியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. உணவிற்குப் பிறகு ஊழியர்கள் கிராமங்களுக்குள் கடந்து சென்றார்கள்.

இவர்கள் கிராமங்களில் **5** நாள் தங்கிக் கொண்டு வீடு வீடாக சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் சகோ.சாமுவேல்சிங் எழுதிய **"இயேசுவே இரட்சகர்"** கைப்பிரதிகள், சிலுவைக் கொடிகள் இலவசமாகக் கொடுத்து ஊழியம் செய்தார்கள். 11,940 யோவான் சுவிசேஷங்கள், 20,000 **"இயேசுவே இரட்சகர்"** கைப்பிரதிகள், 10,000 சிலுவைக் கொடிகள் கொடுத்து கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

இந்த ஊழியத்தின் மூலம் 183 பேர் தங்கள் முகவரிகளைக் கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.



சாட்சி நேரம்



கிராம ஊழியர்கள் 5 நாள் ஊழியங்களை முடித்து,மீண்டும் முன்பு கூடிய **A.G.** சபையில் கூடி ஜெபித்து, **கர்த்தர் தங்களை எப்படி கிராமங்களில் நடத்தினார்** என்பதை **சாட்சியாகச் சொல்லி** தேவனை மகிமைப்படுத்தினார்கள். கடைசி நாள் ஜெபத்தில் T.V.G.M. ஸ்தாபகர் Bro. P.T. கிறிஸ்டோபர் , T.V.G.M. காரியதரிசி Bro. ஸ்டீபன் கிறிஸ்டோபர் ஆகியோர் கலந்து கொண்டு ஜெபித்தார்கள். இதில் மலேசியாவை சார்ந்த **பாஸ்டர். ஆல்பிரட் சாமுவேல்** அவர்கள் சிறப்பு தேவ செய்தி வழங்கினார்கள். கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படியும், இனிப்பும் வழங்கப்பட்டது. இரவு உணவிற்குப் பின் கிராம ஊழியர்கள் அவரவர் ஊர்களுக்கு சந்தோஷத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

பாஸ்டர் ஆல்பிரட் சாமுவேல்



**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு:1 சகோதரி.கிரேஸ் பத்மா, அனனக்கிளி, ஜெபமணி, கிளமெண்ட்ஸ் மேரி, கஸ்தூரி, மரியாள்.**

நீராவி, கூலிப்பட்டி, கிங்கம்பட்டி, மேலராமநதி ஆகிய கிராமங்களில் வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம், **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், சிலுவைக் கொடிகள் கொடுத்தோம். ஒரு தோட்டத்தில் மதிய வேளை சற்று இளைப்பாறலாம் என்று சென்ற போது, அங்கு ஒருவருக்கு நாக்கில் கட்டி இருந்தபடியால் அதை ஆப்ரேஷன் செய்துள்ளார். இதனால் பேசக் கூட முடியாமல் கஷ்டப்பட்டார். இவருக்காக எண்ணெய் பூசி ஜெபம் செய்தோம். கர்த்தர் சுகம் கொடுத்தார். தொடர்ந்து ஆலயத்துக்கு செல்ல ஆலோசனை கூறினோம். இப்படியாக மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகம், 500 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:2 சகோ. மாற்கு மாரியப்பன், மகாராஜன், சாலமோன் டக்ளஸ், ஜான் பிரைட், சாம் புரூஸ்**

கல்லாங்குளம், கணக்கி ஆகிய கிராமங்களுக்கு போக வழி கேட்டபோது அங்குள்ள கிறிஸ்தவர்களில் சிலர் இந்த கிராமங்களுக்குப் போக வேண்டாம். எதிர்ப்பு அதிகமாக இருக்கும். அடித்தாலும் அடிப்பார்கள் என்றார்கள். கர்த்தர் எங்களுக்கு முன்பாகச் சென்று காரியத்தை கைக்கூடி வரப்பண்ணுவார் என்று சொல்லி புறப்பட்டு சென்றோம்.

அந்த ஊர் எல்லையில் நின்று ஜெபித்து விட்டு கிராமத்துக்குள் கடந்து போய் வீடுவீடாக சென்று சுவிசேஷம் கூறினோம். யோவான் புத்தகம், **"இயேசு இரட்சகர்"** கைப் பிரதி மற்றும் சிலுவைக் கொடிகள் கொடுத்தோம். யாவரும் அன்பாக வாங்கிக் கொண்டார்கள். கிராமங்களில் இருந்த சிலர் எங்களை உபசரித்து டீ, மிச்சர் வாங்கிக் கொடுத்தார்கள். எதிர்ப்பு அதிகமாக இருக்கும் அடிப்பார்கள் என்று சொன்ன கிராமத்தில் மக்கள் எங்களை வரவேற்று, சத்தியத்தை வாஞ்சையோடு கேட்க கர்த்தர் உதவி செய்தார். மொத்தம் 1120 யோவான் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:3 சகோதரி. விமலாதாஸ், பிச்சையம்மாள், கிருபா பழனியம்மா, தேவ பாக்கியம், ரெபேக்கா லட்சுமி**

நாங்கள் 7 கிராமங்களில் சென்று வீடு வீடாக யோவான் புத்தகம் கொடுத்து சுவிசேஷம் கூறினோம். யாவரும் வாஞ்சையோடு பெற்றுக் கொண்டார்கள். சில இடங்களில் வியாதியுள்ளவர்களுக்கு ஜெபித்தோம். நாங்கள் சென்ற கிராமங்களில் உள்ள மக்கள் யாவரும் மிகவும் ஏழைகளாக இருந்தார்கள். இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபத்துடன் இக்கிராமங்களில் ஊழியம் செய்து மொத்தம் 1300 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:4 சகோதரி.மேரி செல்லாபாய், பழனியம்மாள், லீதியாள், தேவகிருபை சலோமி சம்மனசு**

நாங்கள் ஒவ்வொரு நாளும் கிராமங் களில் சென்று வீட்டிற்கொரு யோவான் புத்தகம் கொடுத்தோம். யாவரும் வாஞ்சையோடு வாங்கினார்கள். சில வீடுகளில் வியாதியாயிருந்த மக்களுக்கு எண்ணெய் பூசி ஜெபித்தோம். சில கிராமங்களுக்கு **5** கி.மீ.க்கு அதிகமாக நடந்து சென்று ஊழியம் செய்தோம். 1480 சுவிசேஷப் புத்தகங்களும், 1000 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:5 Pr. ஆல்வின், சகோ.தாவீது, ஜோசப் முரளிதரன், அந்தோணி, ஜீவானந்தம்**

செங்கம்படை, பபூல் நாயக்கன்பட்டி, கருங்குளம், கோழிக் கொத்தி, பாக்கு வெட்டி ஆகிய கிராமங்களில் வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம். யாவரும் சந்தோஷமாக வாங்கினார்கள். பிரச்சனையுள்ள மக்களுக்காக ஜெபித்து, மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:6 சகோ. அருள்ராஜ், பீட்டர், ஜெபமலைநாதன், ஸ்டீபன்ராஜ், சாமுவேல் மாசிலாமணி,**

நாங்கள் முத்துப்பட்டி கிராமத்தில் ஊழியம் செய்ய சென்ற போது, அக்கிராம மக்கள் எங்கள் கிராமத்தில் மழையே இல்லை. குடிப்பதற்கு தண்ணீர் ஒரு குடம் ரூ 2.50க்கு வாங்குகிறோம் என்று வேதனையோடு சொன்னார்கள். **நாங்கள் இயேசுவாகிய கடவுளிடம் ஜெபிக்கிறோம். நிச்சயமாக மழை பெய்யும் என்று சொல்லி ஜெபித்தோம். ஜெபித்த 1 மணி நேரத்தில் நல்ல கனமான மழையை தேவன் கட்டளையிட்டார். மக்கள் அளவில்லா சந்தோஷமடைந்தார்கள்.** பச்சேரி கிராமத்தில் 2 வருடமாக கைகால் விழங்காமல் இருந்த 25 வயது இளம்பெண்ணுக்காக ஜெபித்தோம். அடுத்த நாள் அப்பெண்ணின் தாயார் எங்களைப் பார்த்து என் மகள் 2 பேர் துணையுடன் தான் நடப்பாள். நீங்கள் ஜெபித்த பிறகு நான் சும்மா பிடித்த போது நன்றாக நடக்கிறாள் என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:7 சகோதரி. டோராலாசர், அமிர்தம், அந்தோணிமேரி, சீலா, அன்னாள், ரோணிக்கம்**

**பசும்பொன்** கிராமத்தில் யோவான் சுவிசேஷம் கொடுத்தோம். வயதான முதியவர் ஒருவர் கடை வியாபாரம் செய்கிறார். இவருக்கு இயேசுவின் அன்பைச் சொன்னோம். இதைக் கேட்டு எனக்கு பிள்ளை இல்லை, மனைவி இல்லை என்று சொல்லி அழுது விட்டார். அவரை ஆறுதல்படுத்தி இயேசுவுக்கு நேராக அவரைத் திருப்பினோம். அவரும் **இயேசுவே ஆண்டவர்** என்று ஏற்றுக் கொண்டார். **பேச முடியாத ஒரு சிறுவனை இயேசு என்று சொல்ல வைத்தோம்.** வேறு ஒருவர் ஐந்து, ஆறு சாமிகளை நாங்கள் கும்பிட்ட பிறகும் நல்ல வாழ்க்கை இல்லை. உங்க இயேசு சாமியை கும்பிட்டு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்டார். நாங்கள் மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 960 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:8சகோதரி.மாரியம்மாள், சாந்தி, எஸ்தர் பேபி, செலின், மேரி மீனா**

நாங்கள் வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம், **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதி மற்றும் சிலுவைக் கொடி இவைகளை கொடுத்து **இயேசுவே கர்த்தர்** என்று சொல்லி ஊழியம் செய்தோம். ஒரு இந்து பூசாரி எங்களை அழைத்து அவருக்காக ஜெபிக்கும்படி கேட்டார். புத்தகம், கைப்பிரதி, சிலுவைக் கொடியை ஆர்வமாக வாங்கினார். 1025 சுவிசேஷப் புத்தகங்கள், 925 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:9 சகோதரி. ராணி சந்திரா, ஜோதி மணி, தெபோராள், லூயிஸ் அம்மாள், அபியேல் அந்தோணியம்மாள்**

**கோட்டை மேடு** என்ற கிராமத்தில் ஒரு வீட்டில் எங்களை ஜெபிக்கும் படி அழைத்தார்கள். இந்த வீட்டுத் தலைவர் ஒரு ஆக்ஸிடெண்டில் இறந்து விட்டார். 16வயது மகள் தீ கொழுத்தி மரித்து விட்டாள், 26 வயது மகள் மஞ்சள் காமாலை நோயினால் இறந்து போனாள், 26 வயது மகன் மூளை வளர்ச்சி இல்லாமல் இருக்கிறான் என்ற விவரங்களை எங்களிடம் சொன்ன போது மிகவும் வேதனைப்பட்டோம். தாயார் மனக் கவலையினால் தூக்கம் வராமல் அவதிப்படுவதாக சொல்லி ஜெபிக்கும்படி கேட்டார்கள். இவர்களுக்கு இயேசுவின் மனதுருக்கம், அன்பு பற்றி கூறி, ஜெபித்து அருகிலுள்ள சபைக்கு தொடர்ந்து சென்று ஜெபிக்க ஆலோசனை கூறினோம். இதுபோல் கஷ்டப்படுகிற அநேகரை சந்தித்து சுவிசேஷம் சொன்னோம். குடியின் கொடுமைகளை விளக்கி சொன்ன போது ஒருவர் இனி குடிக்க மாட்டேன் என்று சொல்லி தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தார். அவருடைய குடும்பமே மிகவும் சந்தோஷப்பட்டது. மொத்தம் 1015 சுவிசேஷப் புத்தகம், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:10 சகோ. ஜோசப் பெஞ்சமின், ஆரியப்பன், சூசை மாணிக்கம், நோவா, எலிசா**

ஒவ்வொரு கிராமத்திலும் வீட்டிற்கொரு யோவான் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் அன்பாக வாங்கினார்கள். **பனைக்குடி** என்ற கிராமத்திற்குள் நுழையும் போது, சில வாலிபர்கள் இயேசுவை சொல்லுகிறவர்கள் வருகிறார்கள். இவர்களை ஊருக்குள் விடக் கூடாது என்று சொல்லிக் கொண்டு போனார்கள். கர்த்தருடைய கிருபையால் நாங்கள் சென்று அக்கிராமம் முழுவதும் தடையில்லாமல் ஊழியம் செய்தோம். இப்பகுதிகளில் மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்களும், 880 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:11 சகோ. இஸ்ரவேல் வீமன், யோசுவா, இஸ்தாக்கி, பிரபு தாஸ், பாபு சாலமோன்**

நாங்கள் 11 கிராமங்களில் சென்று வீட்டுக்கு ஒரு யோவான் சுவிசேஷம் கொடுத்து, **இயேசுவே மெய்யான கடவுள்** என்று அறிவித்தோம். 5கி.மீ. 10 கி.மீட்டர் துாரம் நடந்து சென்று சுவிசேஷம் அறிவித்து வர கர்த்தர் கிருபை செய்தார். சமாதானத்துடன் ஊழியம் செய்தோம். யாவரும் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகம், 885 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை.**

## 2009 அக்டோபர் மாத இயேசுவை விரும்புவோம் முகாம்

**மாவட்டம் :** நாமக்கல்

**யூனியன் :** ராசிபுரம்

**நாள் :** 10.10.2009 சனிக்கிழமை

**நேரம் :** காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் ரவி ஜான்சன்,**
**இம்மானுவேல் A.G.சர்ச்**
**பெரியசாமி டீ கடை பஸ் ஸ்டாப்,**
**V. நகர், ராசிபுரம் - 637 408.**
**நாமக்கல் மாவட்டம்.**
செல் : 94436 22070, 99432 81640

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்.யோ.15:7

**நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை**

**நாள் :** 30.09.2009 புதன்
**நேரம் :** 7PM-12Mid Night
**இராப்போஜனம் :** இரவு 12மணி

**நாள் :** 01.10.2009 வியாழன்
**துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM
**வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM

**நடைபெறும் இடம்**

**TVGM தலைமை அலுவலகம்**
**100 - கிராமம்,**
**சோமரசம் பேட்டை ( ஆஸ்பத்திரி ஸ்டாப் ) திருச்சி.**

Yishun Evangelical Church பாஸ்டர் ஜோசப் ஜெபமணி மற்றும் Elim Christian Centre பாஸ்டர் விக்கி ஆகிய இருவரும் இணைந்து கிராம ஊழியர் பாஸ்டர் டேனியல் ரெங்கராஜ் அவர்களுக்கு மூன்று சக்கர வாகனம் ஜெபத்துடன் வழங்கினார்கள்.



# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

*உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஜனங்கள் ஜெபத்திற்காக கடிதங்கள், தொலை பேசி மற்றும் ஈமெயில் மூலமாக எங்களோடு தொடர்பு கொள்கிறார்கள். அவர்களுக்காக விசேஷமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9 -12 மணி வரை உபவாசித்து ஜெபிக்கிறோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அற்புதங்களை செய்து வருகிறார். அற்புதங்களை பெற்றுக் கொண்ட மக்கள் சாட்சி கடிதங்களும் எழுதுகிறார்கள். அவைகளில் சிலவற்றை பிரசுரிக்கிறோம். வாசித்து தேவனை மகிமைப்படுத்துங்கள்.*

1. **சகோ. நடராஜா,** U.K.

என் மகளின் திருமணத்திற்காக பொருத்தனையோடு ஜெபித்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் நினைத்ததற்கும், வேண்டிக் கொண்டதற்கும் அதிகமாக திருமணத்தை சிறப்பாக நடத்தித் தந்தார்.

2. **சகோ.ஜெயராஜ்,** UAE.

சுமார் 4 வருடங்களுக்கு முன்பு என் வேலைக்காகவும், குடும்பமாக வெளிநாட்டில் வாழும் வாய்ப்பை தேவன் ஏற்படுத்தி தரவும் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அந்த வாய்ப்பை உருவாக்கித் தந்தார். தேவனுக்கே மகிமை.

3. **சகோதரி தங்கம், கன்னியாகுமரி.**

என் மகளின் திருமணம் நல்ல முறையில் நடந்தது. 2 வருடங்களாக விலைக்குப் போகாமல் இருந்த சொத்தை விற்க கர்த்தர் கிருபை செய்தார்.

4. **சகோதரி அகிலா, சேலம்.**

நான் 2 வருடங்களாக கால் வீக்கத்தினால் நடக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். கர்த்தர் சுகம் தந்தார்.

5. **சகோதரி பரமேஸ்வரி, தஞ்சாவூர்.**

சில வருடங்களுக்கு முன்பு என் அண்ணன் குடும்பம் கடன் பிரச்சனையால் மூழ்கி தவித்தது. கடன் தீர ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் எல்லா பிரச்சனைகளையும் மாற்றி, ஒரு வீட்டையும் கட்டிக் கொடுத்தார்.

6. **சகோதரி சுசிலா, நாமக்கல்.**

என் மகனுடைய திருமணம் கைக்கூடி வர கர்த்தர் கிருபை செய்தார்.

7. **சகோ.நடராஜன், திண்டுக்கல்.**

சுமார் 5 ஆண்டுகளாக என் பெரிய மகன் குடும்பம் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாமல் இருந்தது. தாங்கள் தொடர்ந்து ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு, அவர்கள் தூரத்தில் இருப்பதை அறிந்து நேரில் சென்று பார்த்து வர கர்த்தர் கிருபை செய்தார். மனநிம்மதியை தந்த இயேசுவுக்கு ஸ்தோத்திரம்.

8. **சகோதரி ரேணுகாதேவி, ஈரோடு.**

என் மகள் நன்றாக படிக்க வேண்டும் என்று ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு மகள் நன்றாக படிக்க உதவிச் செய்தார்.

9. **சகோ.அன்பழகன், வேலூர்.**

என் நண்பருக்கு அரசாங்க வேலை கிடைக்க ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு வேலை கொடுத்தார்.

*இவர்களுக்கு அற்புதங்களை செய்த* **இயேசுகிறிஸ்து** *இதை வாசிக்கிற உங்களுக்கும் அற்புதங்களை செய்ய ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார். இன்றே உங்கள் ஜெபவிண்ணப்பங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். ஜெபிக்கிறோம்.*

"உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்". மீகா 7:15

# கலிலேயா முகாம் - 2009

(மகிழ்ச்சியான நாட்கள்)

நாள் : 2009 அக்டோபர் 2,3,4 வெள்ளி, சனி, ஞாயிறு

இடம் : **கோடாவிளை பஸ் ஸ்டாப்**

(உவரிக்கும் கூடன் குளத்திற்கும் மத்தியில்)

நேரம் : **தினமும் மாலை 6.00 மணிக்கு**

(100 கிராம ஊழியர் சாட்சிகள், சனிக்கிழமை காலை 10-1மணி)

தேவ செய்தியாளர்:

**பாஸ்டர். மாற்கு லூயிஸ் (சென்னை)**

(வரம்பெற்ற தேவனுடைய ஊழியக்காரர்)

**ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள் ! துதியுங்கள்!**

| | |
|---|---|
| **முகாம் ஒருங்கிணைப்பாளர்** | **மீட்பரின் பணியில்** |
| **திரு. இரத்தினம் ஆசிரியர்** | **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** |
| தொலைபேசி : **04637276306** | டைரக்டர், |
| **திரு. மனோகர் ஆசிரியர்,** | தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன், |
| தொலைபேசி : **04637 272664** | **100** கிராமம், |
| மொபைல் : **94864 81522** | திருச்சி – 620 102. செல் : **9443544628** |

## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2009 ஆகஸ்டு மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஆகஸ்டு மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

ஊழியத்தில் உள்ள சகோதரிகளின் பெலவீனங்களில் தேவனுடைய அற்புத கரம் கூட இருந்து, அதிசயங்களைக் காணப்பண்ணினார். அதற்காக தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறோம்.

**'100கிராம ஊழியம்'** பத்திரிக்கையில் வெளியாகும் **ஜெபவீடு கட்டும்** பணிகளின் தேவைகளை அறிந்து **இரண்டு குடும்பத்தினர்** உதவி செய்தனர். புதிய தொடர்புகளை கர்த்தர் அறிமுகப்படுத்தினார். மாதந்தோறும் சந்தித்து வரும் குடும்பங்களில் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்துள்ளார்.

புதிய சபைகளில் அறிமுகப்பணி செய்ய முயற்சித்து வருகிறோம். நிறைவேற ஜெபியுங்கள். **தேவனுக்கே மகிமை!**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**
செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** கடவூர், M.அழகாபுரி கிராம ஜெபவீடு பிரதிஷ்டை முடிவடைய செய்த தேவனைத் துதியுங்கள். அக்டோபர் மாதத்தில் 9 ஜெபவீடுகள் ( பெருவளப்பூர், தொட்டியம், நாகல்கேணி, சிவசங்கர்நகர், பஞ்சம்பட்டி, அங்கலக்குறிச்சி, கோவில் பட்டி லாயல்மில் காலனி, வேந்தன்பட்டி, காவூர் ) கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்ய வாஞ்சிக்கிறோம். தேவசித்தம் நிறைவேற ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** 2009 அக்டோபர் 21 அன்று TVGM சிறுவர் இல்ல கட்டிடப்பணியின் முதல் கட்டத்தை முடித்து, பிரதிஷடை செய்ய வாஞ்சிக்கிறோம். தடையில்லாமல் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். ( மிக முக்கியமாக சிறுவர் இல்லத்திற்கு தளம் போடப்படவும், மின்சாரம் அமைக்கவும் ஜெபியுங்கள்)

***புதன்:*** TVGM Leadership Training Centre சம்பந்தமான பெயர், பதிவு, பேங்க் கணக்கு,நிலம் வாங்குதல், பட்டா செய்தல், வேலி அடைத்தல், நிர்வாகக் குழு, அலுவலக அமைப்பு மற்றும் உடன் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைத்து வேலைகளும் ஒவ்வொன்றாக கர்த்தரின் சித்தத்தின்படி செய்யப்பட ஜெபியுங்கள்.

***வியாழன்:*** தலைமை அலுவலக நிலங்களின் இடையிலுள்ள மூன்று நிலங்கள் முழு காம்பவுண்டு அமைப்பதற்கு பெரும் இடறலாக உள்ளது. தற்சமயம் ஒரு நிலம் மட்டும் ரூ.3,30,000 த்திற்கு விலைக்கு தர முன் வந்துள்ளார்கள். கர்த்தருக்குச் சித்தமானால் பொருளாதார வாசலை கர்த்தர் திறக்க ஜெபியுங்கள்.

***வெள்ளி:*** TVGM தலைமை அலுவலகத்திற்கு கம்ப்யூட்டர்அனுபவமுள்ள அக்கவுண்டண்ட், கார் டிரைவர், சிறுவர் இல்ல வார்டன், சமையல், ஆராதனை நடத்த, கிராம ஊழியம் செய்ய அனுபவமுள்ள போதகர் குடும்பம் யாவையும் கர்த்தர் சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

***சனி:*** புதுக்கோட்டை மாவட்டத்தில் 2வது 100–கிராம ஊழியம் மாதந்தோறும் நடைபெற நல்ல ஒரு தலைவர், 40 தன்னார்வத் தொண்டர்கள், பொருளாதார தேவைகள், அலுவலக அமைப்புகள் யாவையும் கர்த்தர் கிருபையாக தரும்படி ஜெபியுங்கள்.

***ஞாயிறு:*** TVGM க்காக ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற, அறிமுகப் படுத்துகிற தன்னார்வத் தொண்டராக செயல்படுகிற, அலுவலக சேவையாளர், நிர்வாக கமிட்டியினர் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.

**ஜெபக்குழு தலைவர்கள்**

ஒவ்வொரு பட்டணத்திலும் வாரத்தில் ஒரு நாள் கூடி ஜெபிக்கவும், 10 விசுவாசிகளின் வீடுகளில் TVGM உண்டியல்களை கொடுத்து மாதந்தோறும் அவர்களை சந்தித்து, ஜெபித்து காணிக்கைகள் சேகரித்து TVGM க்கு அனுப்பவும், தன்னார்வத் தொண்டர்கள் தேவை.
கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
செல் : **94435 44628**

## சூறாவளிப்பட்டி கிராம விதவைகள், ஏழைச் சிறுவர்கள்





## பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனி





மலேசியா போதகர் ஆல்பிரட் சாமுவேல் அவர்கள் பிஸ்கட் வழங்கினார்கள்.



TVGM Leadership Training Centre நிலத்தைபார்வையிட்டு ஜெபித்தார்கள்.



01.09.2009 அன்று வாக்குத்தத்த தேவசெய்தியளித்து ஜெபித்தார்கள்.



**பாஸ்டர் பவுல்** ( வையப்பமலை ) அவர்களின் **இலங்கை ஊழிய பயணத்திற்காக** விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

**இலங்கை ஊழியத்திற்காக** TVGM அலுவலக சகோதர, சகோதரிகள் சிறப்பு காணிக்கை எடுத்து கொடுத்தார்கள்.

# TVGMசிறுவர் இல்லம்





2009 ஆகஸ்டு மாதத்தில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்தளித்த பாஸ்டர் விக்கி ( பிறந்த நாள் ), சகோதரி ரேச்சல் ( பிறந்த நாள் ), சகோ. ஜேம்ஸ் ( பிறந்த நாள் ),சகோ. முத்துவேல் ( மகன்ஆனந்த் பிறந்தநாள் ), சகோதரி ஷகிலா சாமுவேல் ( மகன் பிறந்தநாள்), சகோதரி சுகந்தி ஜேக்கப் ( மகன் ஜெனின் பிறந்தநாள் ), சகோதரி பூரணலட்சுமி ( மகன் சிவரத்தினம் பிறந்தநாள் ), சகோ. மாணிக்கம் ( 26வது திருமணநாள், சகோதரி பிரின்ஸஸ் மற்றும் இனிப்புகள் வழங்கிய சகோதரி ஷீலா பாஸ்கரன் ( பிறந்த நாள் ) அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. **கர்த்தர் தாமே ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக !**






சகோதரி ரேச்சல் பால் கமலேந்திரன் – Ilford - Uk பிறந்தநாளை நினைவுகூர்ந்து TVGM திருச்சியில் சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

TVGM சிறுவர் இல்லத்தை சகோதரி ஜுடி அம்பி – U.K பார்வையிட்டார்கள். **நன்றி.**

## ஒரிஸா ஊழியத்திற்காக ஜெபியுங்கள்!

கர்த்தருக்குச் சித்தமானால் ஒரு வாரம் சகோ. பி.டி.கிறிஸ்டோபர், சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர் ஆகிய இருவரும் ஒரிஸாவிலுள்ள ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களை சந்தித்து, உதவி செய்யவும், 2 கிராமங்களில் தரைமட்டமாக்கப்பட்ட ஆலயங்களை திரும்ப கட்ட வாஞ்சித்து, பார்வையிட உள்ளார்கள். கர்த்தர் நேரத்தையும், நல்ல சூழ்நிலையையையும் உருவாக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## பார்வையற்றோர் இல்லம்






திருச்சியில் பார்வையற்ற **சகோ.தாமஸ்** அவர்களால் நடத்தப்படும் **விழி இழந்தோர் இல்லத்தை பாஸ்டர் விக்கி** பார்வையிட்டு, யாவருக்கும் தனது பிறந்தநாளில் சோப்பு வழங்கி, தேவசெய்தியளித்தார்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை**

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)

**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து

**MR. STEPHEN CHRISTOPHER, SB 12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**

**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**

**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம் நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

**Return Request**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER : TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.



விருதுநகர் மாவட்டம் – **M.அழகாபுரியில்** பாஸ்டர் டேனியல் ஜோசப் அவர்களுடன் இணைந்து கட்டிய ஜெபவீட்டை Yishun Evangelical Church **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** அவர்கள் 18.08.2009 அன்று தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்தார்கள்.

**ஆகாய் 1:8**

**ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும்.**

**நீங்களும் கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்ட முன் வருவீர்களா?**

## TVGM தலைமை அலுவலக முகவரி

**காணிக்கை, பத்திரிக்கை சந்தா, சிறுவர் இல்லம், ஜெபவிண்ணப்பம், 100-கிராம ஊழியம், அனுமதிஅட்டை, ஜெபவீடு, அப்ளிகேஷன், மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-**

**MR.STEPHEN CHRISTOPHER, DIRECTOR.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**"100 - VILLAGE"**
**SOMARASAMPETTAI, TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL : 94871 92763
94435 44628
Email : 100village@tvgm.org

*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், செய்தி 100 கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹൺഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री